இம்மாநிலத்தில் பயிர்களுக்குப் பூச்சி மருந்து இலவசமாக தெளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : இம்மாநிலத்தில் பயிர்களுக்கு பூச்சி மருந்து இலவசமாக தெளிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை. ஆனால், பூச்சி மருந்துகள் தற்போது 15 சதவிகித மான்ய விலையில் விற்கப்படுகின்றன.

**திரு. ந. நாச்சியப்பன்** : நம்முடைய விவசாயிகளில் ஒரு ஏக்கர், அரை ஏக்கரில் நெல் சாகுபடி செய்கிறவர்கள் நிறைய பேர் இருக்கிறபடியால் அனைவரும் ஒரே நேரத்தில் பூச்சி மருந்து தெளிக்காத நிலையில் ஒருவர் பூச்சி மருந்து தெளித்து பக்கத்தில் இருப்பவர் மருந்து தெளிக்காமல் இருந்தால் பூச்சிகள் அழிக்கப்படுவதில்லை. இதை உத்தேசித்து அரசே இந்தப் பொறுப்பை ஏற்று மருந்து தெளிக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : இப்போதே விமானம் மூலமாக மருந்து தெளிக்கப்படுகிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

### சிங்காநல்லூரிலுள்ள தொழிலாளர் குடியிருப்புகள்

*336 வினா—**திரு. ஏ. சுப்பிரமணியம்** : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூரில் அரசுதனி பெற்ற குடியிருப்புக் காலனியில் வசிக்கும் தொழிலாளர்கள், குடியிருப்புகளை குறிப்பிட்ட காலத்திற்குப் பின் தற்போதுள்ள அனுபோகதார்களுக்குக் கொடுத்து விடுமாறு கோரிய விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : (அ) & (இ) தொழிலாளர் துறை ஆணையர் 5—8—1970-ல் கோயம்புத்தூர் தொழிலாளர் நல அமைப்புச் சங்கச் செயளாலரிடமிருந்து மனு ஒன்றை பெற்றதாக கூறியுள்ளார். மனுவில் உள்ள கோரிக்கையை தொழிலாளர் துறை ஆணையருடனும், வீட்டு வசதி வாரியத் தலைவருடனும் கலந்தாலோசித்து ஒரு பொதுக்கொள்கையாக (General Policy) கருதி முடிவெடுக்க அரசு பரிசீலனை செய்துவருகிறது.

**திரு. சு. துரைசாமி** : வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக இப்போது இந்த வீடுகள் கட்டி தொழிலாளர்களுக்கு விடப்பட்டு வாடகை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் 20 வருஷ காலத்தில் வாடகையோடு கொஞ்சம் சேர்த்துக் கட்டி அதை அவர்களுக்கே கிரயம் செய்து கொடுக்கும் வகையில் திட்டம் கொண்டு வரப்படுமா?

1971 டிசம்பர் 13]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தொழிலாளர்களுக்காகக் கட்டப்படுகிற வீடுகள் ஆங்காங்குள்ள தொழில் பேட்டைகளுக்குப் பக்கத்திலே தொழில் செய்கிற இடங்களுக்குப் பக்கத்திலே கட்டப் படுகின்றன. இந்த இடங்களில் கட்டப்படுகிற வீடுகளை 20 ஆண்டு காலத்தில் பெறும் வகையில தொழிலாளர்களுக்கே கொடுத்து விட்டால் அதற்குப் பிறகு வரக்கூடிய தொழிலாளர்கள் நீண்ட தூரத்தில் குடியேறி அங்கிருந்து வேலைக்குவர வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அதைப் பற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, will the Hon. Minister consider that by selling these houses to the original allottees, they would get money? Also this will result in a sort of revolving fund at the disposal of the Government and with that money, they can construct further houses and why not the proposal be adopted?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இப்போது இந்த வீடுகள் தொழில் பேட்டைக்குப் பக்கத்தில், தொழில் செய்யும் இடத்திற்கு பக்கத்தில் இருக்க வேண்டுமென்ற முறையில் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாகக் கொடுத்து விட்டால், அடுத்த தலைமுறையில் வரும் தொழிலாளர் வரவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அதுபற்றி அரசு பரி சீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நம்முடைய மாநிலத்தில் ஹவுசிங் ஃபார் இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்சைப் பொறுத்தவரையில் பின்தங்கியிருக்கிறோம் என்பதைப் பின்தங்கியோர் இலாகா அமைச்சர் அவர்கள் உணருவார்களா? இதிலே தீவிரமான நட வடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தொழிலாளர்களுக்கு வீடு கள் கட்டிக் கொடுப்பதில் இந்த ஆண்டு அரசு வேகமாகச் செயல் பட்டு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள் கிறேன்.

### *Houses in Foreshore Estate*

* 337 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether rents sent to the Housing Board by the occupants of the Foreshore Estate, Santhome, Madras City, are being refused by the Board;

(b) if so, the details thereof; and

(c) the amount not so far collected on this score?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.